# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 June 2016 Issue - 6


ஆசிரியர் உரை

## "எழுந்து பெத்தேலுக்குப் போ "

**ப**ரலோகத்தின் தேவனால் கொடையாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில், புகழுக்குரிய மனிதர்கள் பலர் தங்கள் தரத்தால் தலைநிமிர்ந்து நிற்பது நமக்குத் தெரியாததல்ல. அது போலவே, வேதாகமத்தில் உள்ள சில இடங்களும் நம் மனதில் மறக்க முடியாதவைகளாக மாறி, நம்முடைய கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் எடுப்பாக நின்று கொண்டேயிருக்கும். புகழுக்கு உரிய அம்மாமனிதர்கள் மாண்பு அடைந்ததற்கு பரமனோடு அவர்களுக்கிருந்த பக்திச் செயல்பாடு காரணமாக இருந்திருக்கும். அது போலவே, இவ்வரிய இடங்கள், மனதிலிருந்து இடம் பெயராமலிருப்பதற்கு, அவ்விடங்களில் நடந்த நிகழ்வுகள் காரணமாக மாறியிருக்கும்.

பேருக்கும், புகழுக்குமுரிய அம்மனிதர்களுக்கு உதாரணமாக ஆபிரகாம், மோசே, பேதுரு, பவுல் போன்றவர்களையும், சிறப்புக்குரிய சம்பவங்களுக்கு உதாரணமாக நோவா காலத்து பெருவெள்ளத்தையும் எலியா காலத்து கர்மேல் பர்வத சம்பவத்தையும், முதல் நூற்றாண்டு பெந்தெகொஸ்தே நாளின் ஆவித் திருமுழுக்கையும், மறக்க முடியாத இடங்களுக்கு உதாரணமாக, ஏதேன் தோட்டம், சீனாய் மலை, எருசலேம் மற்றும் அந்தியோகியா பட்டணம் போன்றவற்றையும் நாம் குறிப்பிடலாம். **மறக்க முடியதா இடங்களின் பட்டியலில், பெத்தேலையும்** நாம் கண்டிப்பாகச் சேர்த்து விட முடியும்.

ஒருவேளை பெத்தேல் என்பது, " மறக்க முடியாத இடங்கள் " பட்டியலில் இடம் பெறத் தகுதியானதுதானா என்று எண்ணத் தோன்றினாலும் இவ்விடத்தின் சிறப்புகளை உற்றுநோக்கின், ஆம், இதுவும் தகுதியானதுதான்

என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெரியும். எப்படியெனில், முற்பிதாக்களில் முதலாமவராகிய ஆபிரகாம், இந்த பெத்தேலில் தான் முதல் முதலாக பலீபீடம் கட்டினான் (ஆதி. 12 ; 7) மூன்றாமவரர் யாக்கோபு, இந்த பெத்தேலில் தான் " ஏணி தரிசனத்தைக் " கண்டார். (ஆதி. 28 ; 10 – 11) இந்த பெத்தேல் தான் " தேவனுடைய வீடு " என்று அழைக்கப்பட்டுள்ளது (ஆதி. 28; 18, 21 : 2 ) இஸ்ரவேலர்கள் தங்களுடைய மார்க்கத்தின் காரியங்களுக்காக இங்கே கூடியிருக்கிறார்கள் (நியா. 20; 18, 21 : 2) இஸ்ரவேல் சரித்திரத்தில் இது " பரிசுத்த இடமாக " இருந்துள்ளது. இப்படி இன்னும் பல சிறப்புகள் கொண்ட இந்த பெத்தேலை. " மறக்க முடியாத இடங்களின் " பட்டியலில் சேர்ப்பது எவ்விதத்திலும் தவறில்லை.

சரி, இந்த பெத்தேல் சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களையும் நாம் இங்கே பார்க்கப் போவதில்லை. சொல்லப் போனால், பார்க்கவும் முடியாது. நமக்குத் தேவையானது ஆதி. 35 ; 1 – 5 – ல் அடங்கியுள்ள பெத்தேல் பகுதி தான். ஆனால், அப்பகுதியைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, இப்போது ஆதியாகமம் 28 – ம் அதிகாரத்தின் உண்மைகள் சிலவற்றைத் தெரிந்து கொள்ள முற்படுவோம்.

தன் தாயாகிய ரெபேக்காளின் ஆலோசனைப்படியும், ஏகபத்தினி விரதனும், தன் தகப்பனுமாகிய ஈசாக்கின் ஆலோசனைப்படியும், நம் ஊர் பண்டைய வழக்கத்தின்படியாக தாய்மாமன் வீட்டிற்குப் பெண் கொள்ளும்படி புறப்பட்டான் (ஆதி. 28 ; 1-5) போகும் வழியில் ஓரிடத்தில் சூரியன் அஸ்தமித்தபடியால், ஒரு கல்லை எடுத்துத் தலையின் கீழ் வைத்து, நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான். அங்கு அவனுக்குக் கிடைத்த ஏணிச் சொப்பனத்தின் மூலம், கர்த்தர் சில வாக்குத்தத்தங்களைத் தந்தார் (13 – 15) பிறகு, நித்திரை தெளிந்து, விழித்து, இவ்விதம் சொல்லுகிறார். **......மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார், இதை நான் அறியாதிருந்தேன் என்று அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது " வானத்தின் வாசல் " என்றான்** (ஆதி. 28 ; 16, 17).

மேற்கண்ட, இவ்விரண்டு வசனங்களையும் நாம் கவனித்துப் பார்த்தால், யாக்கோபு ஏணி தரிசனத்தின் மூலம் நான்கு உண்மைகளை வெளிப்படுத்துகிறான். **1.** மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். **2.** இதை நான் அறியாதிருந்தேன் **3.** இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல. **4.** இது வானத்தின் வாசல், பொருள் பொதிந்த இந்த நான்கு சொற்தொடர்களையும் நாம் ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால், புதிய ஏற்பாட்டில், பரலோகத்தின் தேவனால் திட்டமிடப்பட்டு (எபே. 3 : 9 , 10) தீர்க்கதரிசிகள் பலரால் முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா. 2 ; 1 – 6 ; தானி. 2 ;

44) யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு, மத் 3 : 2) இயேசுவால் வாக்களிக்கப்பட்டு ( மத் 16 : 18 ), பெந்தேகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் கட்டப்பட்ட, ஒன்றான மெய்சபையாகிய, **" கிறிஸ்துவின் சபைக்கு "** அப்படியே ஒத்து வருகிறது.

ஆம், எப்படி யாக்கோபு பெத்தேலுக்கு வந்து சேருமட்டும், பெத்தேலைப் பற்றிய மாபெரும் உண்மைகளை அறியாமல், அதன் அருமை பெருமைகளை உணராமல் எல்லா இடங்களைப் போல இதுவும் ஒன்று என நினைத்தானோ அது போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், பரிசுத்த வேதாகமத்தில், கிறிஸ்துவின் சபையைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பேருண்மைகளை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல், எல்லாச் சபைகளைப் போல இதுவும் ஒன்று என்று நினைத்துக் கொண்டிருக்கிறது. யாக்கோபு தேவனுக்குப் பயப்படுகிற குடும்பத்திலே பிறந்து, யெகோவா வணக்கத்திலே வளர்ந்து, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் குணம் கொண்ட ஒரு மனிதனாக இருந்தும், பெத்தேலைப் பற்றிய உண்மைகளை எப்படித் தெரிந்து கொள்ளாமலிருந்தானோ அது போல, பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயமும், மெய்யான தேவனையும் அவருடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவையும் அவருடைய தியாகத்தையும் அறிந்திருந்தும், வேதத்தின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற மனதிருந்தும், அதே **வேதத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.**

முதலாவது, யாக்கோபு. **" மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலே இருக்கிறார் "** என்றான். இவ்வாக்கியம், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப் பட்டுள்ள சபைக்குப் பொருந்துகிறதாக இருந்தால், அடுத்து வரும் கேள்வி கர்த்தர் எந்த சபையில் இருக்கிறார்? என்பது. இயேசுவானவர். " ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடி யிருக்கிறார்களோ. அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் " என்றார் (மத். 18 ; 20) கிறிஸ்தவ சமுதாயத்தால் மிகத் தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற வசனப் பகுதிகளில் இதுவும் ஒன்று. ஆராதனையைப் புறக்கணித்து அவம திக்கின்ற கிறிஸ்தவர்களும், ஆராதனையை அற்பமாக எண்ணி வீட்டிலேயே இருந்து கொள்ளும் சோம்பேறிகளும், சபையை விட்டு பிரிந்து போகும் துரோகிகளும், தங்களுக்குத் தேவையான சமயத்திற்கு எடுத்துப் பயன்படுத் துவதற்காக இவ்வசனத்தை நுனி நாக்கிலேயே வைத்திருப்பர். இப்படிப்பட்ட வர்களுக்கு உதவியாயிருக்கும்படியாகவா இயேசுவானவர் இந்த வசனத்தைச் சொன்னார் ? இல்லவே இல்லை. இவ்வசனத்திலே வலியுறுத் தப்பட்டிருக்கும் வார்த்தை **" நாமத்தினாலே "** என்பது. " நாமத்தினாலே " என்றால் **" அதிகாரத்தினாலே "**. இதன்பொருள் கூடிவருகிறவர்கள்

" இயேசுவின் அதிகாரத்தினாலே " கூடி வரவேண்டும் (எபி. 9 ; 15 – 17 கொலே. 3 ; 17). இன்னும் இதன் பொருள், **இயேசுவின் நாமத்தில் கூடுவதென்றால், புதிய ஏற்பாட்டு உபதேசங்களின்படி கூடுவதாகும்.** புதிய ஏற்பாட்டின் முழுமையான உபதேசப்படி. ஏதோ ஒரு வசனத்தின்படியல்ல. கர்த்தர் எந்த ஸ்தலத்தில் இருக்கிறார் என்பதை, யாக்கோபு தேவனிடத்திலிருந்து கிடைத்த சொப்பனத்தின் மூலம் உணர்ந்து கொண்டது போல, **கர்த்தர் எந்த சபையிலே இருக்கிறார்** என்பதை, தேவ ஆவியினால் நமக்கு அருளப்பட்டிருக்கிற புதிய ஏற்பாட்டு வசனங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

யாக்கோபின் இரண்டவது சொற்றொடர், **" இதை நான் அறியாதிருந்தேன் ".** இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தின் நிலையும் இதுதான். அறிந்து கொள்ள வேண்டியதை, அறிந்து கொள்ள வேண்டியவர்கள், அறிந்து கொள்ளவேண்டிய நேரத்தில் அறிந்து கொள்வது அவசியம். யாக்கோபு ஒருகட்டத்தில் அறியாதவனாகவே இருந்தான். ஆனால், வெளிப்பாடு கிடைத்தபோதோ அறிந்து கொண்டான். அறியாமையுள்ள காலங்களை தேவன் பொறுத்துக் கொள்ளுகிறார் ( அப். 17 ; 30 ). ஆனால், அறியும் வாய்ப்பும் கிடைத்த பிறகு, தேவன் பொறுத்துக் கொள்ளுவதில்லை. அப்போஸ்தலன் பவுலும் கூட, இயேசுவால் சந்திக்கப்படும் வரைக்கும் இயேசுவையும், அவருடைய சபையையும் அறியாமல் தான் இருந்தான் (அப் 9 ; 1 – 5). ஆனால், வெளிப்பாடு கிடைத்த பிறகு அதை அறிந்து அதற்காகத் தன்னை ஒப்புக் கொடுத்து வாழ்ந்தான். இந்நாளில் வாழும் நமக்கு புதிய ஏற்பாட்டு வசனங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடியால் அவைகளிலிருந்து கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ள வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

யாக்கோபின் மூன்றாவது சொற்றொடர் பெத்தேல் " தேவனுடைய வீடு " என்பது. வீடு என்பது வாசம் செய்யும் இடம்,தேவனுடைய வீடு என்றால் தேவன் வாசம் செய்யும் இடமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையும், தேவனுடைய வீடு என்று அழைக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலன் பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, " தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே, நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். (1 தீமோ.3 ; 15) என்று கூறியுள்ளார். ஆகையால், கிறிஸ்துவின் சபையானது தேவனுடைய வீடாக உள்ளது. வேறு எந்த சபையும் தேவனுடைய வீடாக வேதாகமத்தால் அழைக்கப்படவில்லை.

யாக்கோபின் நான்காவது சொற்றொடர், " இது வானத்தின் வாசல் " என்பது. "வாசல் அல்லது வாயில் என்பது, ஒன்றினுள் புகுவதற்கான முகம் அதாவது, அதன் வழியாகத்தான் பிரவேசிக்க வேண்டும். பிரவேசிக்க முடியும்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுவானவர், **" நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்"** (யோவான். 10 ; 9) என்று கூறியுள்ளார். இயேசுவின் வழியாகப் பிரவேசிப்பதெனில், அவருடைய உபதேசத்தின் வழியாகப் பிரவேசிப்பது தான். வானத்தின் வாசலாக, இயேசுவின் புதிய ஏற்பாடு சொல்லும் சபை இருக்கிறது. ஒருவன் பரலோகம் செல்ல வேண்டுமானால், இயேசுவாகிய வாசல் வழியாக, புதிய **புதிய ஏற்பாடு அறுதியிட்டுச் சொல்லும் கிறிஸ்துவின் சபை வழியாகவே சொல்ல முடியும்.** கண்டிப்பாக வேறு வழியில்லை.

சரி, இப்பொழுது, ஆதி. 35 ; 1 - 5 வசனப் பகுதிக்கு வருவோம்.

"தேவன் யாக்கோபை நோக்கி : நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலி பீடத்தை உண்டாக்கு என்றார். அப்பொழுது, யாக்கோபு தன் வீட்டாரையும், தன்னோடே கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி ; உங்களிடத்தில் இருக்கிற **அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டு உங்களைச் சுத்தம் பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள். நாம் எழுந்து பெத்தேலுக்கு போவோம்** வாருங்கள், எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச் செய்து. நான் நடந்த வழியிலே என்னோடே கூட இருந்த தேவனுக்கு இங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றார். அப்பொழுது அவர்கள் தங்கள் கையில் இருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும் யாக்கோபிடத்தில் கொடுத்தார்கள் ; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் அருகே இருந்த **கர்வாலி மரத்தின் கீழே புதைத்துப் போட்டான்.** பின்பு பிரயாணம் புறப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத் தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால். **அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின் தொடராதிருந்தார்கள்** (35 ; 1 - 5).

மேலுள்ள வசனப் பகுதியில், தேவன், தன் தாசனாகிய யாக்கோபை நோக்கி : " நீ எழுந்து பெத்தேலுக்குப் போ " என்கிறார். எந்த பெத்தெலுக்கு? தேவன் இருக்கிற ஸ்தலமாகிய பெத்தேலுக்கு, தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு. வானத்தின் வாசலாகிய, தேவனுடைய வீடாகிய பெத்தே லுக்கு. இங்கே, தேவனுடைய கட்டளையை ஏற்றுக் கொண்ட யாக்கோபு, பெத்தேலுக்குப் போக என்ன செய்தான் என்று பார்த்து, அதன் மூலம், நமக்குத் தேவையான சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

### I. யாக்கோபு பெத்தேலுக்குப் போக ஆயத்தமானான்

தேவனுடைய வார்த்தையின்படி, தேவனுடைய வீடாகிய பெத்தே லுக்குப் போகும்படி,யாக்கோபு செய்த முதல் காரியம் **" ஆயத்தம்"** .

ஆம், தேவ கட்டளையைப் பெற்றுக் கொண்ட யாக்கோபு எப்படி செயல் பட்டான் என்று பாருங்கள். " அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும், தன்னோடே கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டு, உங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் " என்றான். அதாவது, **தேவனுடைய வீட்டிற்கு**, இருக்கின்ற நிலையில் அப்படியே போக முடியாது என்பதையும், அவரண்டை போவதற்குத் **தடையாக இருக்கும்** எல்லாவற்றையும் நீக்க **வேண்டுமென்பதையும்** யாக்கோபு நன்றாக அறிந்திருந்தான். ஆகவே தான், தன்னோடிருந்தவர்களைப் பார்த்து தடைகளை விலக்குங்கள், பரிசுத்தம் பண்ணுங்கள், வஸ்திரங்களை மாற்றுங்கள் என்று கூறினான்.

அருமையானவர்களே, நாமும் கூட தேவனுடைய வீடாகிய, வானத்தின் வாசலாகிய கிறிஸ்துவின் சபைக்குப் போவதற்கு, முதலாவது நம்மை ஆயத்தம் செய்ய வேண்டுவது அவசியம். எந்த ஒரு காரியத்தைப் சரியாய்ச் செய்வதற்கு ஆயத்தம் மிகவும் அவசியம். சீனாய் மலைக்கு மோசோயை அழைத்த தேவன், " விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில் " என்றார் (ஆதி, 34 ; 2) **ஆயத்தத்தின் அருமையை உணர்ந்த தேவன், ஜனங்கள் தன்னண்டை வரும்பொது, பூரணமாய் வரவேண்டு மேன்று எதிர்பார்த்து, ஒய்வு நாளுக்கு முந்தின நாளை"ஆயத்த நாள் "** என்று கூறினார். (மாற்கு. 15 ; 42 ).

தேவனுக்காக ஆயத்தமாவதின் முக்கிய நோக்கம், தேவனுக்குப் பிரிய மில்லாதவைகளை விலக்கிப் போடுவதாகும். தடையாக இருப்பவைகளைத் தகர்த்துப் போடுவதாகும். எதிராக இருப்பவைகளை எடுத்துப் போடுவ தாகும். பாவம் நமக்கும் தேவனுக்கும் பிரிவினையை உண்டாக்கி அவருடைய முகத்தை நமக்கு மறைக்கிறது. ( ஏசா. 59 : 1, 2 ) தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரித்த பாவத்திற்கு முதலாவது முடிவு கட்ட வேண்டும். பாவத்திற்கு அடிப்படைக் காரணம் அந்நிய தெய்வங்கள் என்பதை உணர்ந்த யாக்கோபு அந்த தெய்வங்களை வாங்கி " ஓர் கர்வாலி மரத்தின் கீழ் புதைத்துப் போட்டான். ஆம் பாவத்திற்கு நிரந்தரமான ஓர் ஏற்பாட்டைச் செய்தான்.

தேவனுடைய வீடாகிய கிறிஸ்துவின் சபைக்கு ஒருவன் வந்து சேர வேண்டுமானால், பாவங்கள் அறவே கழுவப்படவேண்டியது அவசியம் " இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி ஒருவனை சுத்திகரிக்கும் " ( 1. யோவான். 1 : 7 ) இயேசுவின் அந்த மகிமையான இரத்தத் தோடு ஒருவன் வேதாகம ஞானஸ்நானத்தின் மூலம் தொடர்பை ஏற்படுத்தி கொள்ளமுடியும் (ரோமர். 6 : 4 , 1. பேதுரு. 3 ; 21).

**II யாக்கோபு பெத்தேலுக்கு எழுந்து போனான்**

தேவனுடைய வார்த்தையின்படி, தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு, வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்குப் போகும்படி, யாக்கோபு செய்த இரண்டாவது காரியம் **" எழுந்து சென்றது ."**

தேவ கட்டளையைப் பெற்றுக் கொண்ட யாக்கோபு தன்னையும், தன்னோடிருந்தவர்களையும் ஆயத்தம் செய்ததோடு நிறுத்தியிருப்பானா னால், அவன் பெத்தேலுக்குப் போயிருக்க முடியாது. மாறாக, " நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள் (35 : 3) என்று கூறி, முன்னின்று வழி நடத்தினான். தீர்மானம் எடுப்பதும், ஆயத்தமாவதும் கொஞ்சம் சுலபம். ஆனால், தொடங்குவதும், செயல்படுத்துவதும் படு சிரமம். ஆனால், யாக்கோபோ, தீர்மானித்தான், ஆயத்தமானான். அதன்படி செயல்பட்டான்.

இன்றைக்கு,தேவனுடைய வார்த்தையின்படி, தேவனுடைய வீட்டிற்குப் போக முடிவெடுத்த யாக்கோபு போல, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக் கான, ஏன் கோடிக்கணக்கான யாக்கோபுகள் கிறிஸ்தவத்திற்கு உலகெங் கும் தேவை. ஆம், தேவனுடைய வீடாகிய, வானத்தின் வாசலாகிய, கிறிஸ்து வின் சபைக்குப் போவேன் என்று தீர்மானிக்கும், ஆயத்தமாகும், எழுந்து புறப்படும் யாக்கோபுகள் அவசரமாகத் தேவை. அப்படிப் போவதற்குத் தடை யாக இருக்கும் பாவங்களாகிய பாரம்பரியங்கள், மனித உபதேசங்கள், சபைக் கட்டுப்பாடுகள், உபதேசக் கோட்பாடுகள், குடும்பப் பெருமைகள், கிறிஸ்தவ மூட நம்பிக்கைகள் போன்றவற்றை கிறிஸ்துவுடனெ கூட அடக் கம் செய்யப்படும் ஞானஸ்நானமாகிய கர்வாலி மரத்தின் கீழ் நிரந்தரமாகப் புதைத்துப் போடும் யாக்கோபுகள் தேவை. தேவனைத் தேடும் ஒவ்வொரு வனும் எழுந்து செயல்படுகிறவனாக இருக்க வேண்டும். அப்போஸ்தலன் பவுல் எபேசியருக்கு என்ன எழுதுகிறார் பாருங்கள். **ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்** ( எபே.5 : 14 ) தேவன் நம்மை பிரகாசிக்கச் செய்ய நாம் நம்முடைய பாவ நிலையிலிருந்து எழுந்தே ஆகவேண்டும்.

எழுந்து தகப்பன் வீட்டிற்கு வருவதற்கான சிறந்த உதாரணம், நம்மால் கெட்ட குமாரன் என்று சொல்லப்படும் இளைய குமாரன் தான் ( லூக். 15 அதி) அவன் தகப்பனை விட்டு பிரிந்து போன நிலையில், யோசித்தவாறே இருந்திருப்பானானால் என்ன ஆகியிருக்கும்? அல்லது தீர்மானித்து புறப் படாமல் அங்கேயே இருந்திருப்பானானால் எப்படியிருந்திருக்கும்? தகப்ப னண்டை வந்திருக்க முடியுமா? தகப்பன் அவனை ஏற்றிருப்பாரா? புதிதான வாழ்வு தான் அவனுக்கு கிடைத்திருக்குமா?

III. **யாக்கோபு ஆசிர்வாதம் பெற்றான்**

மூன்றாவதாக, தேவனுடைய வார்த்தையின்படி தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு, வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்கு ஆயத்தமாகி, எழுந்து போனதினாலோ, யாக்கோபு ஆசீர்வாதம் அடைந்தான் என்பது.

ஆம், தேவ கட்டளையை ஏற்றுக் கொண்டு, தேவனண்டை போவதற்குத் தடையாக என்னவெல்லாம் இருக்கிறதென்று கண்டு அவைகளை எடுத்துப் புதைத்து தன்னை ஆயத்தமாக்கினதோடல்லாமல் எதைப் பற்றியும், யாரைப்பற்றியும் கவலைப்படாமல் எழுந்து புறப்பட்டான். இந்த யாக்கோபை, தேவன் பாதுகாத்தார். இங்கே வசனம் சொல்வதை கவனியுங்கள். " பின்பு பிரயாணம் புறப்பட்டார்கள் ; அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால் அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின் தொடராதிருந்தார்கள். பாதுகாப்போடு தேவன் நிறுத்திக் கொள்ளாமல் யாக்கோபை ஆசீர்வதிக்கவும் செய்தார். " யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்த பின், தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி, அவனை ஆசீர்வதித்தார். (35 ; 9) **பாதுகாத்து, ஆசீர்வதித் ததோடு,** " நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குக் கொடுப்பேன்; உனக்குப் பின் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தைக் கொடுப்பேன்...." என்று வாக்கும் கொடுத்தார் ( 35 ; 12 ). **தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருக்காக ஆயத்தமாகி, அவருக்காக எழுந்து போன யாக்கோபை தேவன் எப்படி ஆசீர்வதித்தார்** என்று பாருங்கள்.

அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையிலே ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படியே விரும்புகிறோம். அப்படி விரும்புவதில் எந்தப் தவறும் இல்லை. ஆனால், ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்குக் குறுக்கு வழிகள் என்று எதுவும் கிடையாது. ஒவ்வொருவரும், நம்முடைய யாக்கோபை போல செயல்பட வேண்டும், அது தான் ரகசியம். யாக்கோபு, தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தது போல, இயேசுக் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு உபதேசத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். யாக்கோபு தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு, வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்கு ஆயத்தமாகியது போல், நாமும் தேவனுடைய வீடாகிய கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசிப்பதற்கு வேத வசனங்களின்படி ஆயத்தமாக வேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை நம்மை விட்டு விலக்க வேண்டும். இயேசுவால் கொடுக்கப்பட்ட ஏற்பாட்டு உபதேசப்படி நாம் விசுவாசித்து (மாற்கு. 16 ; 16) மனந்திரும்பி ( அப் 2 ; 38 ) அறிக்கையிட்டு ( ரோமர். 10 ; 9, 10 ) கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தின் மூலம், நம்முடைய பாவங்களை அடக்கம் செய்ய வேண்டும். (ரோமர். 6 ; 3 - 6).

இவ்வுண்மைகளைப் புரிந்து, எழுந்து பெத்தேலாகிய கிறிஸ்துவின் சபைக்கு வந்து, தேவனுடைய பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்வோமாக! ஆமென்!! ●

# ஏன் நாங்கள் குரல் இசையை மட்டும் ஆராதனையில் பயன்படுத்துகிறோம்?

Bro. J.C சோட்

இசை இரண்டு வகைப்படும். ஒன்று வாய்வழியான குரல் இசை, மற்றொன்று கருவிகளால் வரும் இசை. குரல் இசை மனித குரல்களின் கலவையால் ஏற்படும் ஒரே மாதிரியான இசை, இதுதான் உலகிலேயே படைப் பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது. இது நம் சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதிகளாக ஏறெடுக்கப்படுகிறது. இது ஆவியாலும், ஜீவனாலும் நிறைந்திருக்கிறது. இசைக்கருவிகளைக் கொண்டு உண்டாக்கப்படும் இசை மனிதனால் உண்டாக்கப்பட்ட கருவிகளிலிருந்து வருகிறது. அந்த இசைக்கருவிகள் உயிரற்றவை. அவைகளுக்கு ஆற்றலும் இல்லை. உணர்வுமில்லை. அவைகள் சத்தமிடுவதற்கு ஒரே காரணம், மனிதன் அவைகளை அடிக்கிறான், இழுக்கிறான் அல்லது வாசிக்கிறான் . இப்போது கேள்வி இது தான். தேவன் தன்னுடைய படைப்பான மனிதன் தன்னை துதிக்க வேண்டும் என்று விரும்புகிறாரா அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளால் தான் துதிக்கப்பட வேண்டும் என விரும்புகிறாரா அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளால் தான் துதிக்கப்படவேண்டும் என விரும்புகிறாரா? அவருக்கு எது அதிக அர்த்த முள்ளதாயிரக்கும்? எபிரெய எழுத்தாளர் இப்படிச் சொல்கிறார். ஆகையால், “ அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலினை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் ” ( எபிரெயர் 13 ; 15 ). நம் உதடுகளின் கனிகளால் தேவனைத் துதிக்க வேண்டும் என்று ஆசிரியர் சொல்வதை கவனியுங்கள். நம்முடைய உதடுகளின் கனி என்னவாயிருக்கும் ? நம் பேச்சு, பாடல், ஜெபங்கள், துதி வார்த்தைகள் போன்றவைகளே. இவைகளெல்லாம் யாருக்கு ஏறெடுக்கப்பட வேண்டும். நிச்சியமாக தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்.

உதடுகளின் கனியால் தேவனைத் துதிக்கிற கருத்தை நாம் தொடர்ந்து பார்க்கும் போது பவுல் இப்படிச் சொல்கிறார், “ சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து ”

என்று சொல்கிறார் (எபேசியர் 5 : 19 , 20), இங்கே பல்வேறு வகையான பாடல்களினால் ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லுதல் பற்றி பவுல் பேசுகிறதை கவனியுங்கள். அந்தப் பாடல்கள் ஆவிக்குரியவைகளாகவும், வேதவசனத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்று வலியுறுத் துகிறார். கடைசியில், குறிப்பாக இந்தப் பாடல்கள் பாடப்பட வேண்டும் என்றும், இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணவேண்டும் என்கிறாரே தவிர இசைக்கருவிகளினால் அல்ல. கிறிஸ்தவர்கள் இசைக் கருவிகள் இல்லாமல் பாடல் மாத்திரம் பாடி. தேவனை ஆராதிக்க முடியுமா? அநேகமாக நீங்கள் முடியும் என்று சொல்வீர்கள். ஆனால். இசைக் கருவிளோடு பாடல் பாடுவது பற்றி எப்படி? வேத வசனங்கள் அப்படிப் பாடலாம் என்று போதிதத்தால் அது நன்றாக இருக்கும். ஆனால், அதற்கான வேத வாக்கியங்கள் எங்கே இருக்கிறது? வேத வசனங்கள் அப்படிப் போதிக்கவில்லையென்றால், பாடும் போது இசைக் கருவிகளோடு பாடி னால், நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவர்களா இருக்க முடியுமா?

மறுபடியும், பவுல் இப்படிச் சொல்கிறார். " கிறிஸ்துவின் வசனம் உங்க ளுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து, புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருத யத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி " (கொலோசெயர் 3 : 16). இப்போது பவுல் இங்கே என்ன சொல்கிறார்? கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத் துகிறார், ஆவிக்குரிய வேத வசனத்தின் அடிப்படையிலான பாடல்களினால் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லப்பட்டிருக்கிறதை உங்களால் காண முடிகிறதா? அப்படியில்லையென்றால், ஆராதனையில் தேவனைத் துதிக்கும்படியாக இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் போது தேவனுடைய வார்த்தையோடு கூட்டுகிற வேலையைச் செய்வதாக இருக்காதா?

ஆனால், அதில் எந்தத் தவறையும் நாங்கள் காணவில்லை என்று நீங்கள் விவாதிக்கலாம். உங்களைப் போல வேறொருவரும் இதில் எந்தத் தவறும் இல்லையே என்று கூறலாம். இது அப்படியே தொடரலாம். இங்கே கவனிக்க வேண்டியது நாம் தேவனுடைய வார்த்தையின் போதனை யின்படி நடக்க வேண்டும் என்பதே. அப்படி நாம் நடக்கவில்லையென்றால் ஒன்றைக் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்?

இசைக்கருவிகள் வாசிப்பது உங்களுக்க பிடித்திருக்கிறது என்று நீங்கள் கூறலாம் அல்லது இசைக்கருவிகளை வாசிக்கம் திறமை பெற்ற வர்களின் நிலை என்ன? இசைக்கருவிகளை இசைப்பதன் மூலமாக அவர் கள் கர்த்தரைத் துதிப்பதால் தேவன் கனப்படுத்தப்படமாட்டாரா? இங்கே

பிரச்சனை, நான் என்ன விரும்புகிறேன் என்பதல்ல. மாறாக, என்னத்தை தேவன் எதிர் பார்க்கிறார் என்பது தான். ஒருவருக்கு இசைக்கருவிகளை வாசிக்கும்படி இசைக் கருவிகளை வாசிப்பதற்கு அனுமதி கொடுக்கப் பட்டால், வழக்கத்திற்கு மாறான திறமைகளைக் கொண்டுள்ள வேறுபலரை என்ன செய்வது? அந்தத் திறமைகள் எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஏறெடுக்கும்படியாக அவைகளை ஆராதனைக்குள் கொண்டு வரலாம் என்று வாதிடுவோமா? இங்கே நான் சொல்லும் கருத்தை உங்களால் புரந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.

ஆராதனையில் இசையைப் பயன்படுத்துவதற்கு ஆதரவாக செய் யப்படும் முக்கியமான வாதம் தாவீதும் மற்றவர்களும் பழைய ஏற்பாட்டில் அப்படிப் போதித்திருக்கிறார்கள் என்பது. அவர்கள் அப்படிப் போதித்திருக் கிறார்களா? இல்லையா என்பது ஒருபுற மிருக்கட்டும். உண்மை என்ன வென்றால், கிறிஸ்து சிலுவையில் மரித்துப் பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டு புதிய பிரமாணத்தைத் தந்துவிட்டபடியால் பழைய பிரமாணம் இப்போது நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. நியாயப்பிரமாணம் மோசே யின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து வின் மூலமாய் உண்டாயின என்று வாசிக்கிறோம் ( யோவான் 1 : 17 ). நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், நியாயப்பிரமாணம் ஒழிந்து போகாது என்று இயேசு சொன்னார் (மத்தேயு 5 ; 17 , 18 ). நியாயப்பிரமாணத்தை அகற்றிப் போகும்படி கிறிஸ்து சிவவை யில் மரித்தபோது அதை நிறைவேற்றினார் ( கொலோசெயர் 2 : 14 ). காரியம் இப்படி இருக்க, சங்கீதத்தையோ வேறு எந்தப் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியையோ ஆராதனையில் இசைக்கருவியுடன் கூடிய பாடலை நியாயப்படுத்த பயன்படுத்த முடியாது. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் செய்யப்பட்ட அநேக காரியங்களை நிகழ்காலத்தில் நம்மால் செய்ய முடியாது, செய்யக்கூடாது.

ஆராதனையில் இசை பயன்படுத்தப்படுவதை நியாயப்படுத்த செய்யப்படும் மற்றுமொரு வாதம், பரலோகத்தின் இசை இருக்கும் என்பது தான். பரலோகத்தில் இசை இருக்குமானால், பூமியில் ஆராதனையில் இசையைப் பயன்படுத்த முடியும் என்று முடிவு செய்கிறிறார்கள். நிச்சயமாக, நிச்சயமாக, இசைக்கருவிகளைக் கொண்டு இசைக்கப்படும் இசையைப் பற்றி தான் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வெளிப்படுத்தின விசேஷத்திலோ அல்லது வேறு எங்குமோ மனிதனால் உண்டாக்கப்பட்ட சொல் அர்த்தரீதியிலான இசைக்கருவிகள் இருக்குமென்று எங்கே சொல்லப் பட்டிருக்கிறது? அப்படியே, பரலோகத்தில் இசை இருந்தாலும், இன்று கர்த்தர் ஆராதனையில் பயன்படுத்த அதை அனுமதித்தார் என்று பொருள்படாது. உண்மையில், பரலோகத்தில் இருக்கிற அநேக காரியங்களுக்கு இந்த பூமியில் நமக்கு அனுமதி இல்லை. இன்றைக்கு, குறிப்பாக தேவன்

ஆராதனையில் என்னத்தை எதிர்பார்க்கிறார் என்பதும், பரலோகத்தில் என்னவெல்லாம் காணப்படலாம் என்பதும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.

வேத வல்லுநர்களும், மாபொரும் மதத்தலைவர்களும் அநேக வருடங்களாக ஒத்துக் கொள்ளுகிற ஒரு காரியம், வேத வாங்கியங்களிலிருந்தோ அல்லது வேறு ஏதாவது நம்பத்தகுந்த ஆதாரங்களிலிருந்தோ முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு எந்த ஒரு குறிப்போ, அடையாளமோ இல்லை என்பது தான்.

எனவே, இந்தத் தலைவர்களில் அநேகர், அவர்கள் வாழ்ந்த காலத்தின் மக்களோ அல்து இன்றைய நாளில் வாழும் மக்களோ தேவனுக்கான ஆராதனையில் இசைக்கருவிகள் கூடாதென்று முடிவெடுத்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை கடைசியாக பிரிந்தது. அப்படிப் பிரிந்ததற்கான காரணங்களில் ஒன்று தேவனை துதிப்பதற்கு பாடல்கள் பாடும்போது இசைக் கருவிகள் பயன்படுத்தப்படலாமா? வேண்டாமா? என்பது. இசைக் கருவிகளின் துணையோடு பாடல் வேண்டும் என்றுணர்ந்த கூட்டம் ரோமன் கத்தோலிக்க சபை என்று அழைக்கப்பட்டது, அன்றும் அவர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். இசைக்கு எதிர்ப்பு தெரிவித்த மற்றுமொரு கூட்டம் கிரேக்க ஆர்த்தோடெக்ஸ் சபை என்றழைக்கப்பட்டது, இன்றளவும் அவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதில்லை. பின்பு, சீர்திருத்த மற்றும் புரோட்டஸ்டண்ட் இயக்கங்களைச் சேர்ந்த மார்ட்டின்லூதர், ஜான்வெஸ்லி போன்றோர் தேவனுடைய பரிசுத்த வார்த்தையில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி ஆராதனைக்காக தேவனுடைய தெய்வீகத்திட்டத்திற்கு எதிராக இதுபோன்ற இசைக்கருவிகள் சேர்ப்பதை வெளிப்படையாக எதிர்த்தார்கள்.

எனவே, பாடுகிற காரியமாக இருந்தாலும் சரி, தேவனை நாம் ஆ,ராதிக்கும் போது, இசைக்கருவிகளை பயன்படுத்திப்பாடும் பாடலானலும் சரி, அது அதிகாரம் சம்மந்தப்பட்ட ஒன்றாக இருக்கிறது. வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசி, வேதாகமம் எங்கே அமைதியாக இருக்கிறதோ அங்கே நாம் அமைதியாக இருப்போமோ அல்லது தேவன் என்ன சொல்லியிருந்தாலும் பரவாயில்லை, நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய முன் வருவோமா? வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்கு இருக்கிறது என்று வேதாகமம் பேசியிருக்கிற படியால், கிறிஸ்து எல்லாவற்றைக் குறித்தும் பேசியிருக்கிறார். ஆகவே, நாம் அவரையும், அவருடைய வார்த்தையையும் மதித்து, அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு அப்பால் போகக்கூடாது. ஆகையால், ஆராதனையில் நம்முடைய இசையை வெறும் வாய் ரீதியான பாமலோடு நிறுததிக் கொள்ள வேண்டும். அப்போது மட்டும் தான், தேவன் நம்முடைய காரியங்களில் பிரயப்படுவார் என்று நிச்சியப்படுத்திக் கொள்ளமுடியும்.

பெண்கள் பகுதி

# நம்முடைய பிள்ளைகளுக்கு முன்னுரிமைகளை கற்றுத் தருதல்

Sis. B.B. சோட் / ரேச்சல் இராஜநாயகம்

அற்புத படைப்பான தொலைக்காட்சியின் மூலம் நாம் நம் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளும் அறையிலிருந்தபடியே, பூமியின் பெருந்தொலைவு முனைக்கு பயணம் செய்யும் வாய்ப்பை, இப்போது பெற்றுள்ளோம்.

நான் அப்பேற்பட்ட ஒரு பயணத்தை சமீபத்தில் மேற்கொண்டேன். பாதுகாப்பற்ற அந்த பயணத்தை, நீதிக் கதைகளுக்குச் சொந்த பூமியாகிய " லடாக் " என்ற இடத்துக்கு மேற்கொண்டேன். அங்கே நூற்றாண்டுகளாகியும், இன்னும் மாறாத பழங்கள் வழக்கத்திலிருப்பதை கண்டேன்.

அந்த மழைவாழ் மக்கள், தாங்கொண்ணா துன்பத்தையும், எதையோ இழந்த நிலையோடு இந்த இருபதாம் நூற்றாண்டில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து பார்ப்பதற்கு எவ்வளவு விசித்திரமான இடம்! என்ன ஆச்சரியமான இடம்! என்று எந்தவொரு பார்வையாளரும் நினைப்பார்கள். இந்த இடத்தை வந்த பார்வையாளரும் நினைப்பார்கள். இந்த இடத்தை வந்து பார்வையிடுவதென்பது கடிகாரத்தை தலைகீழாக ஓடச் செய்வது போன்றது. கட்டாயமாக வெளியே உள்ள மக்கள் இங்கு வந்து இந்த அமைதியான கலாச்சாரம் கொண்ட மக்களை, மற்ற இருபதாம் நூற்றாண்டின் நாகரீகம் கொண்ட வாழ்க்கையைப் போல மாற்ற மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், இங்கே மனிதர்கள் எந்தவொரு வசதியும், மருத்துவரும், மருந்துகளும் தங்களுடைய அன்றாட கடினமான வேலையை சுலபமாக்கித்தர எந்தவொரு இயந்திரமும் இன்றி வாழ்ந்தும், செத்தும் கொண்டிருக்கிறார்கள். இதிலும் கொடுமை என்னவென்றால், தேவனுடைய சுவிசேஷம் இங்கு சென்றடையாதிருப்பது இன்னும் துக்கமான விஷயமாகும்.

பெரும்பாலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்தமதத்தை சார்ந்தவர்களாகவே உள்ளனர். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலான நேரம் புத்த மத சடங்குகள் சம்பந்தமாகவே சுழன்று கொண்டுள்ளது.

பொதுவாக வழக்கத்தில் இல்லாத ஒரு பழக்கம் இங்கே காணப்படுகிறது. குடும்பத்தில் உள்ள தலைச்சன் மகன், அல்லது பிரியமான மகன் அவனுடைய சிறு வயதிலிருந்தே பல சமயங்களில், பிறந்ததில் இருந்து கூட,

புத்த மதத்துறவி ஆவதற்காக பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றனர். ஒரே ஒரு தேர்ந்தெடுக்கும் உரிமையோடு வளர்க்கப்படுகின்றான். சிறுபையன்களாக இருக்கும் போதே அவர்கள் துறவி மடத்திற்குச் சென்று அங்குள்ள துறவிகளுடன் சேர்ந்து பயிலுகின்றனர்.

எப்படி இந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறார்கள். அவர்களும் தங்கள் பெற்றோரின் தீர்மானத்திற்கு செவிசாய்க்கிறார்கள்? என்பது நமக்கு கேள்வியாக இருக்கிறது.

லடாக்கில் எப்படியாவது ஒரு துறவியாக வரவேண்டும் என்ற ஒரு மன கிளர்ச்சியும், மனதார உய்த்து உணர்ந்து செயல்பட்டதே இதற்கு காரணம் என்பது தான் இதற்கான சரியான பதில் ஆகும். இந்த பதவி இரண்டு விசேஷ நபர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. முதற் பிறந்த மகன், அதிலும் விசேஷமாக மிகவும் நேசிக்கப்பட்ட மகன்! ஒரு குழந்தையானது. சிறுவயதிலிருந்தே தனக்கென்று சிறந்த ஒரு பொறுப்பு உண்டு என்பதை அறிந்து தன் வாழ்க் கையை அர்ப்பணித்தும், பணியையும் உணர்ந்து வளருமாறு கற்பிக்கப் படும்பொழுது தான் இவ்வாறு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக வளர்க்கப் படுவதை உணர்ந்து அதைப்பற்றிய பெருமையும் ஏற்படுகிறது. தன்னுடைய பெற்றோர்கள் தன்னை மற்ற குழந்தைகளைவிட சற்று அதிக அளவில் மதிக்கிறார்கள் என்ற முழு நம்பிக்கையும் அதன் இருதயத்தில் ஏற்படுகிறது. அவன் கடவுளுக்காக தன் குடும்பத்தின் சார்பில் சேவை செய்வதால், அவன் “ **விசேஷித்தவன்** ” என்ற பெயரைப் பெறுகிறான்.

இந்த விதமான கலாச்சாரமானது, லடாக்கில் எத்தனை குடும்பங்கள் உள்ளதோ அத்தனை புத்த துறவிகள் உள்ளனர் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

அதற்கு நேர்மாறாக, இன்றைக்கு உலகிற்கு ஆசீர்வாதமாக இருக்கும் வகையில் ஊழியர்கள் என்ற முறையில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே உள்ளனர். இதைப் பார்க்கும் போது, மிக முக்கியமான ஒரு கேள்வி எழும்புகிறது. ஏன்? கிறிஸ்தவக் குடும்பங்களில் ஆவிக்குரிய சேவை செய் யவும், போதிக்கவும், கிறிஸ்துவின் உண்மையான ஊழியனாக இருந்து செயல்படவும் ஏன் மிகக் குறைந்த இளைஞர்களே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்.

இதற்கு பதில் என்னவென்று பார்த்தால், இந்த மாதிரியான அர்ப் பணிப்பு பற்றி பெற்றோர்களும், சபையும் செயல்படும் விதமே காரண மாகும். நம்பிள்ளைகள் சிறு வயதாயிருக்கும்போதே “ **வெற்றி உள்ளவனாக** ” வரவேண்டும் என எதிர்பார்த்து அவர்களுக்கு அதை போதித்திருக்கிறோமா? வெற்றியுள்ளவன் என்கிறபொழுது, “ **அதிகமாக சம்பாதித்தால், நீ மிகவும் பாக்கியசாலி** ” என்று சொல்லியிருக்கிறோமா?

அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி பேசும்போது நீ ஒரு மருத்துவராக, வக்கீலாக, வங்கி கணக்கராக, ஆசிரியராக வரவேண்டும் என்று கூறிவிட்டு, ஒரு போதகராக வரவேண்டும் என்பதைச் சொல்லாமலே விட்டு விடுவ துடன், அதைப் பற்றி குறைத்து மதிப்பிட்டும் பேசியுள்ளேமா? முழுநேர ஊழியர்களை ஏதோ அவர்கள் மூன்றாந்தர கிறிஸ்தவர்கள் என்றும், கூலிக்காக வேலை செய்கிறவர்கள் என்றும் மதிப்பே இல்லாத ஒரு வேலை செய்கிறார்கள் என்று கூறியுள்ளோமா?

ஒருவேளை நம்முடைய பிள்ளையோ, பையனோ ஓர் ஊழியனை திருமணம் செய்கிறார்களென்றால், அதை நாம் தடை செய்கிறோமா? அவர்கள் பெரியவர்களாகி வெளிநாடுகளுக்குச் சென்று மிஷனரிப் பணி செய்ய கனவு கண்டு கொண்டிருப்பார்களானால் நாம் அதற்கு எதிராக செயல்படுகிறோமா?

முதலாவதாக, அவர்கள் உலகக் கல்விகளிலே சிறந்து விளங்கு மென்று வலியுறுத்துகிறோம்? ஒருவேளை, அவர்கள் கணிதம், வியாபாரம், இசை, கலை, விளையாட்டு போன்ற காரியங்களில் சிறு வயதிலிருந்தே அவன் திறமை கொண்டவனாயிருந்தால், அதையே தொடர்ந்து செய் என்று கூறுகிறோமா? ஊழியம் செய்வதில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லை என்று அவர்களுக்கு அடையாளம் காட்டுகிறோமா?

இன்றைக்கு நம்மில் வெகு சில பிள்ளைகளே ஊழியர்களாக வருவதற்கு காரணம், நாம் இதன் சிறப்பினை அவர்களுக்கு எடுத்துக் காட்டாததேயாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வீட்டில் ஒரு ஊழியக்கார னாக ஒருவன் வேலை செய்ய வேண்டும் என்று நம்புவதைக் காட்டிலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்த மதத்திலேயும், புத்த சிஷ்யனாக வேலை செய்வதிலும் கௌரவமும், அதிக நம்பிக்கையும் கொண்டுள்ளனரா?

நம்முடைய எண்ணத்திலே பின் என்னதான் தவறு செய்து கொண்டுள்ளோம்? நம்முடைய வலியுறுத்தலில் என்ன தவறு இருக்கிறது. நம்முடைய முன்னுரிமைகளில் என்ன தவறு செய்து கொண்டிருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டு கட்டளையில் கூட தேவன் சொல்லும் போது " இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும்; மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார். (யாத்.13 : 2)

அதைவிட சிறந்த உடன்படிக்கையான புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்து வரும் நம்மிடம் அவர் குறைந்ததையா எதிர்பார்ப்பார்?

இந்தக் கட்டுரை வாசிக்கும் என் அன்பிற்குரிய தாய்மார்களே! உங்கள்

பிள்ளைகளுக்கு முன்னுரிமையை கற்றுக் கொடுத்தலில் நம்முடைய பங்கு எவ்வாறு உள்ளது? இந்தக் கட்டுரை நம்முடைய மனதிற்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தும் என்றே நம்புகிறேன். நம்முடைய இரட்சகராகிய இயே கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய **" உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் "** என்றதில் நாம் எந்த அளவு நம்மை ஈடுபடுத்தியுள்ளோம். இன்றைக்கு நாகரீக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்கள், தங்கள் மகள் கம்ப்யூட்டர், விஞ்ஞானம் இவைகளில் சிறந்து வெளிநாடு சென்று அதிக பணம் சம்பாதித்து பேரோடும், புகழோடும் வாழவேண்டுமென்று அதற்கு தங்கள் நேரம், பணம், உழைப்பு எல்லாவற்றையும் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த **" லடாக்கில் "** உள்ள நிலையை பார்க்கும்போது உண்மையாகவே அது நமக்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. வீட்டுக்கு ஒரு புத்த துறவி!! என்ன ஆச்சரியம்! நம்முடைய குடும்பத்தில் உள்ள ஆண்மக்களை ஊழியனாக வருவதற்கு நாம் சிந்தித்திருக் கிறோமா? அதற்காக முயற்சி எடுத்திருக்கிறோமா? ஜெபிக்கிறோமா? நாமும் அதற்காக முன் வருவதில்லை. அப்படியே முன் வந்து தங்களை ஒப்புக் கொடுத்து ஊழியம் செய்பவர்களையும் சும்மா விடுவதில்லை.

அருமையானவர்களே! இந்த உலகின் காரியங்கள் அனைத்தும் இந்த உலகோடு முடிந்து போகக் கூடியவைகள். நம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய முறையில் தேர்ச்சி பெற அவர்களுக்கு வசனம், ஜெபம் இவைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும்போது, **" நீயும் நல்ல போர்ச்சேவகனாய் தீங்கனுபவி "** என்கிறார். நாமும் நம்முடைய பிள்ளைகள் தேவனுக்காக பாடுபடுவதற்கு, பழக்கப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கர்த்தருடைய பணி செய்ய முழுமனதோடு அர்ப்பணிக்க வேண்டும். இதை வாசிக்கும் தாய்மார்களே சிந்திப்பீர்களா? சிந்தித்து செயல்பட தேவன் உதவி செய்வாராக! ஆமென்! ●

## நாளும் நடப்பும்

1. கடந்த ஆண்டில் இந்தியாவில் சாலை விபத்துகளில் 1.46 லட்சம் பேர் சாவு
2. இந்த ஆண்டு பருவமழை சராசரியைவிட அதிகமாக இருக்கும் – வானிலை ஆய்வு மையம்
3. தமிழர் பகுதிகளில் இருந்து ராணுவம் வாபஸ் இல்லை – இலங்கை திட்டவட்டம்
4. கேளிக்கை விடுதியில் துப்பாக்கி சூடு, அமெரிக்காவில் 50 பேர் பலி
5. ஆஸ்திரேலிய ஓபன் சூப்பர் சீரிஸில் இந்திய வீரர்கனை சாய்னா சாம்பியன் பட்டம்

வாலிபர் பகுதி

# வாலிபனே உனக்காக!

Bro. பென்னி மார்ட்டின்

**அ**ருமையானவர்களே! தேவன் நமக்காக மாபெரும் காரியங் களை வைத்திருந்தாலும் அநேக வாலிபர்கள் பிசாசு இந்த உலகத்தில் வைத்திருக்கும் அற்பமான காரியங்களை நாடிச் செல்வதை நாம் காண் கிறோம். நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம் (I யோவான் 5 : 19). பிசாசு வாலிபர்களை பணம், புகழ், கவர்ச்சி போன்ற வலைகளில் பிடித்து வைத்திருக்கிறான். சுவிசேஷம் என்னும் வலையை விரித்து தேவனுக்காக அநேகரைப் பிடிக்க வேண்டிய வாலிபர்கள் தாங்களே சாத்தானின் வலை யில் சிக்கிக்கொள்ளுவது வேதனையான விஷயமாகும். பெரும்பாலான வாலிபர்கள் தங்கள் பெரும்பாலான நேரங்களை உலகப் பிரகாரமான காரி யங்களுக்காகச் செலவிடுகிறார்கள். (எபேசியர் 5 : 15, 16). வசனங்களில் நாம் **" ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போல் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து நாட்கள் பொல்லாதவைகளான தால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் "** என்று வாசிக்கிறோம்.

இவ்வுலகிலேயே மிக விலைவுயர்ந்த பொருள் நேரமாகத்தான் இருக்கமுடியும். கிரேக்க தத்துவஞானியான சாக்ரடீஸ் சொல்லும்போது **ஒருவரிடம் இருக்கும் உடைமைகள் எல்லாவற்றிலும் சிறந்தது நேரம் தான்** என்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் பல தேவதாசர்கள் நேரம் அல்லது காலத்தின் தன்மையைப் பற்றி சொல்லியிருப்பதை நாம் பார்க்க முடியும். பக்தனாகிய யோபு சொல்லும்போது **" எனது நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது "** என்று சொல்கிறார் ( யோபு 7 : 6 ). இவ்வசனத்தில் யோபு தன்னுடைய ஜீவிய, நாட்களின் தன்மையைப்பற்றி சொல்கிறார். யோபு சொல்வது முற்றிலும் சரியானதே. இந்நாட்களில் நேரமானது ஒளி மற்றும் ஒலியை விட வேகமாகச் செல்கிறது. அந்த வேகத்தோடு ஈடுகட்ட முடியாவிட்டால் நாம் மிகுந்த சிரமத்திற்குள்ளாவோம். இந்த சந்தர்ப்பத்தை சாத்தான் நன்றாக பயன்படுத்திக்கொண்டு, வாலிபர்களின் நேரத்தை அவர்களுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பிவிட்டு வீணடித்து விடுகிறான். ஆனால், நாம் பிசாசுக்கு இடங்கொடுக்கக்கூடாது.

மத்தேயு நான்காம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்போது சாத்தான் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய வலையில் சிக்க வைக்கப் பார்த்தான். ஆனால், அவனால் வெற்றி பெற முடியவில்லை. சாத்தான் தேவனைப்போல் சர்வஞானியல்ல, அவனுக்கு எல்லாம் தெரியாது. அவன் நம் நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பதால் நம் பெலவீனங்களை அறிந்து கொள்கிறான் (யாக்கோபு 1:14) அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் என்று பார்க்கிறோம். சாத்தான் நம்மை கூர்ந்து கவனித்து நாம் எதில் பெலவீனமாயிருக்கிறோம் என்பதை அறிந்துகொண்டு நம்மை தன் வலையில் சிக்கவைக்கப் பார்க்கிறேன். நம் இருதயத்தின் நினைவுகள் எல்லாம் அவனுக்குத் தெரியாது. எனவே, நம் மனதுக்குள்ளையே அவன் கிரியை செய்கிறான் என்னும் கருத்து தவறானது, சர்வ வல்லமைவுள்ள தேவனுக்கு மாத்திரம் நம் இருதயத்தின் நினைவுகள் எல்லாம் தெரியும்.

ஆனால், அதே நேரத்தில் சாத்தானின் வல்லமையை நாம் குறைவாக மதிப்பிட்டுவிடக்கூடாது. பேதுரு சொல்லும்போது " உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமே என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் " என்று சொன்னார் (I பேதுரு 5: 8). ஆனால் (I யோவான் 4 : 4) ல் **" உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் "** என்று பார்க்கிறோம். எனவே, நம்மிலிருக்கிற தேவன் பிசாசை விடப்பெரியவராக இருப்பதால் பிசாசை எதிர்த்து நின்றால் அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் ( யாக். 4 : 7 ). சரி, இப்போது தேவன் நமக்காக வைத்திருக்கும் காரியங்களைக் கவனிப்போம்.

### I மாபெரும் சிலாக்கியம் வசனத்தைக் கேட்கும்படி

பிரியமானவர்களே, அநேகர் இந்த உலகத்தில் இன்னும் ஒரு சுவி சேஷப் பிரசங்கத்தைக் கூட கேட்டதில்லை. இவ்வுலகில் பல பணக்காரர்கள் பல காரியங்களைக் கேட்டிருக்கலாம், பார்த்திருக்கலாம். ஆனால், அவை கள் ஒன்றுமே ஒரு சுவிசேஷப் பிரசங்கத்திற்கு ஈடாகாது. சுவிசேஷமாகிய தேவனுடைய வார்த்தையில் வல்லமை இருக்கிறது. அதில் ஜீவன் இருக்கிறது. எனவே தான், அது ஆத்துமாவை இரட்சிக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளால் நம்மை நாம் நிரப்பிக்கொள்ளவேண்டும். அதற்கு நாம் தேவனுடைய வார்த்தைகளை தியானிக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்லும்போது, **" உம் வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது "** (சங்கீதம் 119 : 125). இது மெய்தான் ஏனென்றால், இருள்சூழ்ந்த நம் வாழ்க்கைக்கு நல்ல

பாதையை காட்டக்கூடிய வெளிச்சமாய் தேவனுடைய வசனம் இருக்கிறது. வாலிபராகிய நாம் நம் வழியை எதினால் சுத்தம் செய்ய முடியும்? வேத வசனத்தின்படி நம்மைக் காத்துகொள்கிறதினால்தானே! ஆனால், தேவனுடைய வசனத்தை நாம் தியானித்தால் மாத்திரம்போதாது. மாறாக, அதை நாம் நடைமுறைப்படுத்தவேண்டும். இதைப்பற்றி யாக்கோபு ஆசிரியர் சொல்லும்போது, " அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் " என்று கூறுகிறார் (யாக்கோபு 1: 22)

### II **மாபெரும் வார்த்தைகள் - விசுவாசிக்கும்படி**

பலவிதமான நெருக்கடிகளிலிருந்து தேவன் நம்மை விடுவித்த விதத்தை நினைத்துப் பாருங்கள். அதற்குக் கைமாறாக, தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அவரை விசுவாசிப்பதுதான். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று (எபிரேயர் 11: 6) நாம் வாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இவ்வுலகில் பலர் கென்னடி, காந்தி போன்றோர் அப்படிச் செய்தார்கள் இப்படிச் செய்தார்கள் என்று அவர்களை நேரில் கண்டிராமல் வரலாற்றைப் படிப்பதன் மூலமாகவோ அல்லது மற்றவர்கள் சொல்லக்கேட்டோ நம்புவார்கள். ஆனால், தேவன் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்க மறுப்பார்கள். பிரியமானவர்களே நம் விசுவாச அளவிற்கேற்பத்தான். நம் ஆசீர்வாதத்தின் அளவும் இருக்கும்.

### III **மாபெரும் தேவன் - நாம் ஆராதிக்கும்படி**

நாம் ஆராதிக்கும் ஜீவனுள்ள தேவன் எவ்வளவு அருமையானவர் என்பதை பல வேளைகளில் நாம் மறந்து போகிறோம். தேவன் நம் வாழ்வில் செய்த எல்லா நன்மைகளையும் என்னிப்பார்த்தால் நாம் அவரை எப்போதுமே துதிக்க வேண்டும். ஆனால், நாம் அவைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. தேவன் ஒரு நன்மையை செய்யும்போது, அந்த நேரத்தில் மாத்திரம் அதற்காக தேவனுக்கு நன்றி சொல்கிறோம். பின்பு அவைகளை நாம் மறந்துவிடுகிறோம். தேவனுடைய அன்பின் ஆழம், உயரம், நீளம், அகலம் அவர் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பியதால் விளங்குகிறது. இதில் தேவனுடைய அன்பு விளங்குகிறது, ( யோவான் 3 : 16 ), அவருடைய இரக்கம் விளங்குகிறது ( எபேசியர் 2 : 8 ), இப்படிப்பட்ட அருமையான தேவனை நாம் கொண்டிருப்பது மாபெரும் பாக்கியமாகும்.

●

சிறுவர் பகுதி

# ஆசீர்வாதங்களுக்கான ஆலோசனை

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு குழந்தைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகமாயிருப்பீருகள் என நம்புகிறேன். புதிய கல்வியாண்டை ஆரப்பிக்கும் உங்களுக்கு எனது வாழ்த்துக்களை இயேசுவின் நாமத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு கூட உங்களுக்கு சில ஆலோசனைகளையும் கொடுக்கவேண்டும் என எண்ணுகிறேன். ஆம், இந்த கல்வியாண்டு உங்களுக்கு ஆசீர்வாதமானதாக இருக்கவேண்டும். அது தேவனாலே நிச்சயம் ஆகும். எனவே, அவருக்கு பிடித்த குழந்தையாக இருப்பதும் அவசியம்தானே? சரி, இரண்டு ஆலோசனகளை உங்களுக்காகத் தருகிறேன்.

1. கொலோ சேயர் 3 : 17 " வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதை செய்தாலும், அதையெல்லாம் கரத்தராகிய இயேசுவின் நாமத்னாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் ". பிள்ளைகளே! இந்த புதிய கல்வி ஆண்டில் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திலும், நீங்கள் பிதாவுக்கு மகிமை செய்யுங்கள். எப்படி அப்படி செய்ய முடியும்? நீங்கள் எந்த ஒரு கரியத்தையும் ஆரம்பிக்கும் போது ஜெபம் செய்வதன் மூலமாக, எல்லா காரியங்களுக்கும் ஜெபம் மூலம் நன்றி தெரிவிப்பதின் மூலமாக , நீங்கள் நம் பிதாவுக்கு பிரியமான பிள்ளைகளாக முடியும். அதே போல, தவறான எந்த காரியத்திற்கும் நீங்கள் உங்களை விலக்கிக் கொள்வதன் மூலமாகவும் நீங்கள் பிதாவைப் பிரியப்படுத்த முடியும்.

2. நீதி 1 : 7 " கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் " இது உங்களுக்கு மிகவும் பழக்கமான ஒரு வசனம் தான். ஆனாலும், இதிலிருக்கும் உண்மையை நன்றாக புரிந்து கொள்ளவேண்டியது அவசியம். உங்கள் கல்விக்கு தேவையான அறிவு, புத்தி, ஞானம் இவை யாவும் கர்த்தர் தருகிறார் நீதி. 2 : 6 ல் " கர்த்தர் ஞானத்தை தருகிறார் (யாக். 1 : 5 ). எனவே, உங்களுக்கு தேவையான ஞானம் அவரிடம் இருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அவரிடம் கேட்டு, அவருக்கு பயந்து நடந்துகொள்வது, அவ்வளவு தான்!

எனவே இந்த கல்வியாண்டில் தேவனை முன்னிலைப்படுத்தி அவருக்கு பயந்து அதன் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதத்தையும் ஞானத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ள என் வாழ்த்துக்கள்!!

வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பரலோக ராஜ்த்தில் ஸ்திரீகலின் ஊழியம்

Bro. K. பாஸ்கர்

**தி**ருமறை ஆசான் வாசகர்களுக்கு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பரலோக ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையில் ஸ்திரீகளுக்கென்று ஊழியத்தை தேவன் வைத்துள்ளார். அவர்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியதில்லை. அவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் தனிப்பட்ட பெண்களிடமோ, வாலிபர்களிடமோ பகிர்ந்து கொள்ளலாம். அது பற்றி ஆண்டவர் இயேசு கூறிய சிறிய உவமையின் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

I. **உவமை** (மத்தேயு 13 ; 33)

வேறொரு உவமையைச் சொன்னார். பரலோக ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்று படி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார்.

II. **ஸ்திரீகளின் ஊழியம்**

தேவன் தமது சித்தத்தை ஒரு போதும் ஸ்தரீகளிடம் சொன்னதில்லை, ஆதாமை அழைத்து தமது சித்தத்தைச் சொன்னார் ( ஆதி 2 : 16, 17 ) மேலும், தேவன் நோவாவை அழைத்து தமது விருப்பத்தைத் தெரிவித்தார் ( ஆது 6 ; 13, 14 ). மேலும், தேவன் விசவாசத்தின் தகப்பனை அழைத்து தமது இடத்தைச் சொன்னார். (ஆதி 12 ; 1 – 3) அதுவே புதிய ஏற்பாட்டிலும். அயேசுவின் ( மத் 1 ; 20 ) அதுபோல ஆண்டவர் இயேசு சொன்ன உவமையின் மூலமாகத் தெரிவித்தார். அதாவது ஒரு ஸ்தீரீ அப்பஞ்சுடுவதற்கு புளித்த மாவை ஒரு துண்டு எடுத்து அடுமனைக்கு போகுமுன் அந்த புளித்தமா வோடு பிசைந்த மாவை வைப்பார். அதன் பிறகு, உள்ளுக்குள் புளித்த மாவு மறைந்திருந்து பூரியை செய்கிற பிசைந்த மாவை உப்பப் பண்ணுகிற இந்த வேலையை ஸ்திரீகள் செய்வார்கள் என்று ஆண்டவர் கூறுகிறார். அதுபோல சுவிசேஷத்தை நைசாக ஒருவருக்குச் சொல்லி ஆத்துமா ஆதாயம் செய்கிறான். இதுவே ஸ்திரிகளின் ஊழியம். மற்றபடி மேடை ஏறி பிரசங்கிக்கவோ, போதிக்கவோ தேவை இல்லை (1 தீமோ 2 : 11, 12) அவர் அமைதியாக இருக்க வேண்டும்.

காரணம் என்னவென்றால், முதலில் உருவாக்கப்பட்டது ஆதாம் என்ற

புருஷன். அதன் பிறகே ஏவாள் ஸ்திரீ உருவாக்கப்பட்டாள். பிசாசின் வஞ்சக பேச்சல் விழுந்தது ஸ்திரீ. எனவே, அவள் மேடை ஏறிப் போதிக்க அதிகாரமில்லை. (I தீமோ. 2 ; 13 , 14). ஆனால் இன்று சில சபைகளில் பெண் போதகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவையெல்லாம் வேதத்தை மீறுவதாகவே உள்ளது. வேதத்தை மீறுவது பாவம். (1 யோ 3 : 4) தேவன் கொடுத்துள்ள ஸ்தரீகளின் ஊழியத்தை சாதாரணமாக நினைக்கக் கூடாது. புளித்த மாவு எவ்வளவு வேகமாக மற்ற பிசைந்த மாவை புளிப்பாக்குகிறதோ அதுபோல நாம் ஒருவரிடம் சொல்லும் சுவிசேஷமும் வேகமாகப் பரவுகிறது. இதுவே ஸ்திரீகளின் ஊழியம்.

III. **ஸ்திரீகளின் விசுவாசம்**

ஸ்திரீகளின் விசுவாசம் வீடு வீடாகச் சென்று கைப் பிரதிகளைக் கொடுப்பது இல்லை. அவள் அமைதியான முறையில் தகக்கிருக்கும் சொத்தைக் கொடுப்பதாகும். புதிய ஏற்பாட்டில் சில ஸ்தீரீகள் தங்கள் ஆஸ்திகளின் மூலமாக ஆண்டவருக்கு ஊழியம் செய்தனர் (லூக்கா 8 : 3) மற்றபடி சபைகளில் ஸ்திரீகள் போதிப்பது அயோக்கியமா இருக்கும் ( 1 கொரி 14 ; 34 , 35 ) ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்ற தம்பதியினர் அமைதியான முறையில் அப்பொல்லோ என்ற வேதாகம சாதுரிய வானுக்குச் சொன்னார்கள். அதுவல்லவோ அவர்கள் விசுவாசம் அதுபோல நாமும் அமைதியான முறையில் நமது விசுவாசத்தைத் தெரிவிப்போம் (அப் 18 : 26) இதுவே ஸ்திரீகளின் விசுவாசம்.

வேத வசனங்களில் புளித்த மாவு பெரும்பாலும் தீங்கான செயல் களுக்கே ஒப்பிடப் பட்டுள்ளது (மத் 6 : 6 – 12) (லூக் 12 ; 1, 1 கொரி 5 ; 6 – 8 , கலாத் 5 ; 9 ). ஆனால், இந்த உவமையில் இயேசு கிறிஸ்து தீமையான கிரியைக்கு ஒப்பிடவில்லை. ஏனென்றால், பரலோக ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபை உலகில் பாவ இருளிலிருந்து விடுவித்து தேவ ஒளியிடம் வழி நடத்துகிறது. ( கொலோ 1 ; 13 , 14 ) ஆகவே, இந்த புளித்த மாவு நன்மையான செயல்களுக்கு ஆண்டவர் இயேசு சொன்னார் புளித்தமாவு என்ற சுவிசேஷம் ஸ்திரீகளின் விசுவாசம் மூலமாக வேகமாகப் பரவி பலன் தருகிறது.

(தொடரும்)

---

*“ அன்றியும்; அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் ” ( ரோமர் 8 : 28 )*

# வீண்போகும் நம்பிக்கைகள்

Bro. K. பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! மனிதன் இயல்பாகவே எதன் மீதாவது நம்பிக்கை வைத்து வாழ வேண்டிய நிலைமையில் இருக்கின்றான். எனவே தான், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் – உன்னையே நீ நம்பு, யானைக்கு பலம் தும்பிக்கை, மனிதனுக்கு பலம் நம்பிக்கை என்றெல்லாம் நம்பிக்கையைப் பற்றி பேசுகிறான். ஆனால் சமுதாயத்தில் நம்பிக்கைகள் பொய்த்து போவதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம். தேர்வில் அதிக மதிப்பெண்கள் வரும் என்று நம்பி ஏமாற்றமடைந்த சில மாணவக் கண்மணிகள் தங்கள் ஆருயிரை மாய்த்துக் கொள்வதைப் பார்க்கிறோம். எது செய்தாலும் பெற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிற சில விடலைகள் அவர் களுடைய கடிந்து கொள்ளுதலை தாங்க முடியாமல் தவறான முடிவைக் தேடிக் கொள்கிறார்கள். தாங்கள் நம்பியிருந்த நபரின் அன்பு நிலையானது அல்ல என்று அறிய நேரிடும் போது பல வாலிபப்பிள்ளைகள் தற்கொலை எனும் மதிகேடான முடிவுக்குச் செல்வதையும் காண்கிறோம்.

இன்னுமாய் முதிர்ச்சியடைந்த மனிதரும் கிடைக்க வேண்டிய சொத்துக்களுக்காக நம்பிக்கை வீணாகும் போது கொலையும் செய்யு மளவு துணிந்துவிடுகிற அதிர்ச்சியான சம்பங்களையும் கேள்விப்படு கிறோம். ஆக, மனிதனின் நம்பிக்கை அவன் வாழ்வில் முக்கிய மாற்றங்க ளுக்குக் காரணியாக அமைகின்றது. ஒரு மனிதனுக்கு எப்படிப்பட்ட நம்பிக்கை வேண்டும், எந்த சூழ்நிலைகளில் எதை நம்பக்கூடாது போன்றவற்றை தேவனுடைய வார்த்தையே அழகாகப் படம் பிடித்துக் காண்பிக்கிறது. வீண் போகாத நம்பிக்கையைப் பற்றி இக்கட்டுரையில் தெளிவடைய தேவன் நமக்குப் கிருபை செய்வாராக.

இஸ்ரயேல் ஜனங்கள் தேவனைவிட்டு தூரமாய் போனபோது அநேகந் தடவை தீர்க்கதரிசிகளால் கடிந்து கொள்ளப்பட்டார்கள். ஏசாயா அதைக் குறித்து அவர்கள் நீதியைத் தேடாமல் மாயை நம்பி அபத்தமானவைகளை பேசுகிறார்கள். கட்டு விரியனின் முட்டையை நல்லதென்று நம்பி சாப்பிட எத்

தனித்து, சிலந்திவலையாகிய நெசவுகளால் தங்கள் நிர்வாணம் மூடப்படக் கூடும் என்று **விக்கிரகங்களை தெய்வம் என்று நம்பி** ஏமாறும் மக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மனுஷன் மெய்யான ஜீவனுள்ள தேவன் மீதும் அவனுடைய வேதத்திலும் நம்பிக்கை வைக்கும் போது தான், அவனுடைய நம்பிக்கை வீண்போகாது என்று நீதிமொழிகளில் காண்கின்றோம். **உன் மனதை பாவிகளின் மேல் பொறாமைக் கொள்ளவிடாதே; நீ நாள் தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு நிச்சயமாகவே முடிவு உண்டு.** உன் நம்பிக்கை வீண் போகாது. நீதி. 23 : 17, 18. தேவனுக்குப் பயப்படும் ஞானம் இருக்கும் போது உன் உள்ளம் அமைதலாய் இருக்கும். உன் நம்பிக்கை வீண் போகாது : நீதி. 24 : 14.

சரி, மனிதனின் நம்பிக்கை ஏன் வீண் போகிறது என்று சில காரணங்களை வேத வசனங்களின் உதவியோடு பார்க்கலாம். முதலாவது, அவனுடைய நம்பிக்கையை தேவனைவிட்டு மனுஷன் மீது வைக்கும் போது அவனுடைய நம்பிக்கை வீணாகப் போகிறது. தங்களுடைய உயர்வுகளுக்கு பெரும்பாலானவர்கள் பதவி, அந்தஸ்து, அதிகாரம் உள்ள மனுஷர் மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால், அது நிறைவேறாமல் போய் புலம்பித் திரியும் அநேக மக்களை சமுதாயத்தில் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்; நிலங்களை விற்று, நகைகளை விற்று அதுவும் போதாமல் கடன்களை வாங்கி வெளிநாட்டில் வேலை, அரசாங்க வேலை என்று மனுஷரிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்களின் பட்டியல் நீளமானது. அதிலும் மனமுடைந்து உயிரை மாய்த்துக் கொண்டவர்களும் உண்டு. தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேதாகமத்தில் மத்திய வசனப்பகுதி எது என்று உங்களுக்குத் தெரியுமா? சங்கீதம் 118 : 8. **மனுஷரை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் புற்றுதலாய் இருப்பதே நலம்!** என்ற வசனப் பகுதிதான் அது! அதைத் தொடர்ந்து வாசித்தால் பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் **நம்பாதேயுங்கள்** என்று தெளிவாக தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கின்றது.

தன் உறவினர்களை நம்பி ஏமாந்தவர்களும் அநேகர் உண்டு. அப்படிப்பட்ட அனுபவமுள்ள பெரியவர்கள் தான், " ஏழ்மையில் உள்ள உறவினர்கள் வீட்டிற்கு அழைப்பில்லாமலே சென்றுபார், செல்வந்தர் வீட்டிற்கு அழைத்தால் மட்டும் போ " என சொல்லி வைத்துள்ளார்கள். சமீபத்தில் ஒரு ஆட்டோவின் பின்புறமாக கீழ்கண்டவாறு எழுதியிருந்தது.

**எதிரியைக் கூட நம்பு, துரோகிகளையும் நம்பு. ஆனால் சொந்தக் காரனை நம்பாதே!** – பாவம் அது.

அனுபவித்து வந்த வார்த்தைகள் என்று நினைத்துக் கொண்டேன். இப்படியான ஏமாற்றத்தில் இருக்கும் உள்ளங்களையே ஆண்டவர் இயேசு, " வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே என்னிடத்தில் இளைப்பாறுதல் உண்டு! வாருங்கள் " என்கிறார். சென்னைத் தமிழில் " இதெல்லாம் தேறாத கேசு " என்று ஒரு பேச்சு உண்டு. அதை அழுத்தமாக, வேதம் சபிக்கப்பட்டவர்கள் என்று சொல்கிறது. மனுஷரை நம்புகிறவர்கள் தான் சபிக்கப்பட்டவர்கள் என்று சொல்கிறது. (எரேமியா 17 : 5).

**மனுஷர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்.** மேலும் நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள். எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்? என்று வேதம் கேட்கிறது. ஏனெனில், அவன் மூச்சு எந்த நேரமும் நின்று போகலாம். **அப்போது உன் நம்பிக்கை வீண் போகும்.** உறங்காமல், தூங்காமல், உன்னை விட்டு விலகாமல், கைவிடாமல் காக்கும் தேவன் மீது நம்பிக்கை வைத்து நல்வாழ்வு வாழ்வோம்.

இரண்டாவதாக, அவனுடைய நம்பிக்கையை ஐசுவரியத்தின் மீது வைக்கும் போது அவனுடைய நம்பிக்கை வீணாகப்போகிறது! அநேகர் தங்கள் சுகவாழ்வுக்கும் எதிர் காலத்திற்கும் பணத்தையே நம்புகிறார்கள். அப்போஸ்தல உபதேசத்தில் இருக்கும் கிறிஸ்துவின் சபையாராகிய நமக்கு பவுல் சொல்வதை கவனிப்போம். 1 தீமோ 6 : 17. இவ்வுலகத்திலே ஐசுவரிய முள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையில்லாமல், நிலையற்ற செல்வத்தில் மேல் நம்பிக்கை வைக்காமல் – நாம் அனுபவிக்க சகல வித நன்மை களையும் நமக்குக் கொடுக்கிற தேவன் மேலேயே நம்பிக்கை வைக்க வேண்டுமென வலியுறுத்துகிறார். சரி செல்வந்தர்கள் தங்கள் விசுவா சத்தை எப்படி வெளிப்படுத்தலாம் என்பதற்கு இந்த வசனப்பகுதியானது நன்மை செய்யவும், தாராளமாய் கொடுக்கிறவர்களும், உதார குணமுள்ளவர்களாய் இருக்கவும் ஆலோசனை சொல்லுகிறது. 1 தீமோ 6 : 18 கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவெனில் மனுஷன் தனக்கு வேண்டியவர்களை பணம் கொடுத்து பரலோகம் அழைத்து செல்ல முடியாது. " பாரீன் டூர் " வேண்டுமானால் அழைத்து போகலாம். சங்கீதம் 49 : 6 – 8. தங்கள் செல்வத்தை நம்பி பெருமை பாராட்டுகிற ஒருவனும் தன் சகோதரனுடைய அழிவில் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்க முடி யாதே! மேலுமாக, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல் தன் செல்வப் பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக் கொண்ட மனுஷனை நிச்சயமாக தேவன் நிர்மூலமாக்குவார் என்று தாவீது சொல்கிறார் சங் 52 : 5 – 7 அதைத் தொடர்ந்து ஞானியாகிய சாலமோனும் தன் ஐசுவரியத்தை

நம்புகிறவன் விழுவான் நீதி 11 : 28. மாறாக, அதே நீதிமொழிகள் 28 : 25 ல் **கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்** என்று வாசிக்கின்றோம். இவ்வுல கத்தில் ஐசுவரியவானாக வாழ்ந்த உத்தமன் யோபுசொல்வதை கவனிப்போம்.

பொன்னின் மீது நம்பிக்கை வைத்து – தங்கத்தைப் பார்த்து நீ என் ஆதரவு என்று நான் இரகசியமாய் என் உள்ளத்தில் மகிழ்ந்து இருந்தாலும் அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டிய குற்றம் என்றும், அது தேவனை மறுதலிப்பதற்கு சமம் என்றும் கூறுகிறார். (யோபு. 31 : 24 – 28).

எனவே தான், நீதி மொழிகளில் ஆகூர் என்னும் பக்தன் ஒரு அருமையான ஜெபத்தை தேவனிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறார். மாயையும், பொய் வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும், தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நீதி 30 : 8, 9. ஏன் பணம் அதிகமாக வேண்டாம் என்கிறார்? அதற்கு ஒரு முக்கிய கார ணத்தை 9ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். **நான் பரிபூரணம் அடைகிற தினால், கர்த்தர் யார்? என்று சொல்லி மறுதலியாதபடிக்கு** என்ற கார ணத்தை முன் வைக்கிறார். முதலாவது, தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேட வேண்டிய மனம், செல்வம் பெருகும் போது அதையே நாடத்தொடங்கிவிடும். செல்வப் பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை! உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும் என்றார் ஆண்டவர். தரித்திரருக்கு உதவி செய்வதையே ஆண்டவரும் வலியுறுத்தி அதற்கு மனமில்லாதவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிது என்கிறார்.

இறுதியாக, கர்த்தர் மீது வைக்கும் நம்முடைய நம்பிக்கையே வீண்போகாது. தேவன் மீது நம்பிக்கை வைத்து தேவனைத் தன் நம்பிக் கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்றும், அவன் தான் கனி கொடுக்கிற செழிப்பான மரத்தைப் போலிருப்பான் என்றும் எரேமியா கூறுகிறார் (எரே. 17 : 7, 8). இந்த நம்பிக்கை என்ற தமிழ் வார்த்தை ஆங்கிலத்தில் Hope என்றும், Trust என்றும் இரண்டு வார்த்தைகளால் குறிப்பிடப்படுகிறது. இதில் Hope என்பது எதிர்கால வாழ்வுக்குத் தேவையான நம்பிக்கையைக் குறிக்கும். Trust என்பது நிகழ்கால வாழ்வில் வரும் பிரச்சனைகளில் நாம் தேவனிடம் நம்பிக்கை வைப்பது ஆகும். பொதுவாக மனுஷனுக்கு பணம் சம்பாதிப்பதில் சோர்வு வருவதில்லை. அதனால் தான் O.T. என்கிற வேலை நேரத்திற்கும் அதிகமாக உழைப்பது மற்றும் லீவு நாட்களிலும் வேலை செய்வதும், சபை கூடுதலை விட்டும் சம்பாதிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதனால் தான், ஆண்டவர் இயேசு **ஜெபம் செய்வதில்** நீங்கள் சோர்ந்து போகா

திருங்கள் என்றார். அப்போஸ்தலர் " நன்மை " செய்கிறதில் சோர்ந்து போகா திருங்கள் என்றனர். ஒருவர் சபைக் கூடிவரும் போது மாத்திரமே தன் ஆத்து மாவுக்கு நன்மை செய்ய முடியும். அப்போது தான் தேவன் மீதும் அவரு டைய வேதத்தின் மீதும் நமக்கு நம்பிக்கை பெருகும். அதனால் சபைக் கூடிவர உற்சாகப்படுத்தும் ஊழியர்களை மதித்து அவர்களுக்கு ஒத்தாசை யாயிருங்கள். எபிரெயர் 13 : 17. அப்படி செய்தால் தான் உங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும்.

சில நேரங்களில் எதிர்பார்க்கும் நன்மைகள் நடக்க தாமதமாகலாம். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் திடமனதா யிருங்கள். அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். (சங். 31 : 24). விசுவாசிகளைப் பற்றி தாவீது குறிப்படும் போது, " நம்முடைய ஆத்துமா கர்த்தருக்கிறது. அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமானவர். சங். 33 : 20. நீங்கள் இப்போது எதற்கு எதிர்பார்த்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது! ஆனால், அது வாய்க்க தாவீது சொல்லும் மந்திரத்தைக் கேளுங்கள் : இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கி றேன்? நீரே என் நம்பிக்கை " சங். 39 : 7. ஆக நாம் தேவன் மீது வைக்கும் நம்பிக்கையே நம் எதிர்பார்ப்பை நிறைவேற்றும். " சிலர் ரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள், நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாரட்டுவோம் " என்று. ஏற்கெனவே, சொன்ன வரும் தாவீது தான். சரி நம்முடைய நிகழ்கால தேவைகளுக்கு நம்பிக்கையில் சிறந்த இந்த தாவீது சொல்வதை பார்ப்போமா? பொதுவாக அவிசுவாசிகளின் செழிப்பும் வளர்ச்சியும் நமக்கு எரிச்சலூட்டுபவை. தேவனை நம்பாத அவர்களுடைய சுகத்தைப் பார்த்து நமக்குக் கோபம் வருவது இயல்பு தான். ஆனால் அந்த நினைவுகள் நம் மன நிம்மதியை குலைத்துவிடும். எனவே தான், தாவீது அது தவறு என்றுச் சுட்டிக்காட்டி, " கர்த்தரை நம்பி நன்மை செய். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. உன் வேண்டுதல் நிறை வேறும். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து அவர் மேல் நம்பிக்கையா யிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். ( சங். 37 :1 - 5 ) என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். நம்பிக்கையில் நெம்பர் – 1. ராஜா எசேக்கியா ஆகும். (2 ராஜா 18 : 5). அவனுக்கெதிராக பலமுள்ள சனகெரீப் ராஜா வந்த போது பயந்துவிடாமல் தேவனுடைய மனுஷனாகிய ஏசாயாவினிடத்தில் ஆளுனுப்பி விசாரித்தான் ( 19 : 2 ). நாமும் நம்முடைய பிரச்சனைகளில் ஊழியரையும், விசுவாசமுள்ள மூத்த சகோதரர்களையும் நாட வேண்டும். மேலும் எசேக்கியா தேவனிடத்தில் எங்களை எதிரியின் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று ஜெபித்தான். 2 ராஜா 19 : 19. ஆகவே நாமும் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து ஜெபித்து ஜெயம் பெறுவோம். ●

# விரைந்து வரும் நியாயத் தீர்ப்பு நாள்

Bro. தில்லார்டு துர்மன்

ஓர் அதிகாலைப் பொழுதிலே, எவ்வித முன்னறிவிப்பு இன்றி, காவல் துறை அதிகாரி ஒருவர் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி உங்களை எழுப்பி, உங்கள் பேரில் குற்றங்கள் பல சுமத்தி நீதிமன்றத்திலே கொண்டு போய் உங்களை நிறுத்துகிறார். உங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் எதுவும் தரப்படவில்லை; நீங்கள் அறையிலே செய்த இரகசிய குற்றங்கள் அனைத்தும் நீதிபதியின் முன்னே அம்பலமாகின்றன: உங்கள் எதிர் காலமே அழிந்து போகும் ஆயுள்தண்டனை அளிக்கப்படுகிறது இப்படிப் பட்ட ஒரு சீர்கேடான அவலநிலை பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள், கற்பனை தான் என்றாலும் உங்கள் கண்கள் கலங்கவில்லையா?

என் அருமை நண்பனே, அந்த கடைசி நாளிலே தேவனுடைய நாளிலே தேவனுடைய நியாயசானத்திற்கு முன்பு நிறுத்தப்படும் போதும், மேற்கண்ட நிலையில் நீ நிற்கக் கூடும்! தேவனுடைய வருகை அல்லது உனது மரணம் இவ்வுலகிலிருந்து உன்னைப் பிரிந்த பின்னர், அவருடைய நியாயத்தீர்ப்பு நாள் வருகிறது! **அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே நடக்கவிருக்கிறது.** ( எபி 9 : 27 ) உன்னைத் தயார்படுத்திக்கெள்ள அவகாசம் எதுவும் அளிக்கப்படுவதில்லை! மரணத்தை தொடர்ந்து நியாயத்தீர்ப்பு என்பதே அவரின் நியதி. இவ்வுலகில் மனிதன் கொஞ்ச காலம் வாழ்ந்த பின் மரணமடைந்து, பின் நியாயத்தீர்ப்பை சந்திக்க வேண்டியவனாக இருக்கிறான்!

**நியாயத்தீர்ப்பு நாளை நம்பாதவர்கள் சிலர் உண்டு தேவசித்தத்திற்கு ஏற்புடைய வகையில்** சீரான வாழ்க்கை வாழாமல் நியாயத் தீர்ப்பு நாள் ஒன்று உண்டு என்பதையே நம்ப மறுக்கும் சிலர் உண்டு: தங்கள் பாவங்களின் பலனை சந்திக்க விருப்பமற்று அவர்கள் தேவனுடைய போத னைகளை வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்கள். அதைக் குறித்து பேதுரு கூறும்போது, **முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில்: கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து தங்கள் சுய இச்சைகளின் படியே நடந்து அவர் வருவார் என்று சொல்லுகிற**

**வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாய் இருக்கிறதே என்று சொல்லுவார்கள் "** என்கிறார் (11 பேதுரு 3 : 4) மனிதனுக்குமேற்பட்டசக்தி எதுவுமில்லை எனசாதிக்கும் நாஸ்தீகர்கள் கூட, இயற்கையின் சீரான செயல்பாடுகளைக் கவனிப்பதால் இவ்வுலகம் அழிவதற்கான ஆதாரம் எதுவுமில்லை என்ற முடிவில் இறுமாந்து வாழ்கின்றனர். அதிகாலை உதயமாகி மாலையில் மறையும் ஆதவன் பருவகாலங்களின் ஒழுங்கான மாற்றங்கள், விதைக்கவும் அறுவடை செய்யவும் குறிப்பிட்ட காலங்கள் ஒரு ஒழுங்கின் அடிப்படையில் சீராக சஞ்சரிக்கும் வான மண்டலத்துக் கோளங்கள், அதனதன் ஜாதிக்கேற்றவைனளைப் பிறக்கிக்கும் மிருக, பறவை இனங்கள் இத்தியாதி காரியங்கள் அனைத்தையும் காணும் மனிதன் உலகத்திற்கு அழிவு இல்லை ' என்று முடிவு கட்டி விடுகிறான். ஆனாலும், இவ்வுலகைப் படைத்த தேவன், தாம் சொன்னபடியே அவர் நிய மித்த நாளில் இவ்வுலகை அழிக்கத்தான் போகிறார்!

**நியாயத் தீர்ப்பு நாள் தவிர்க்க முடியாதது**

நியாயத் தீர்ப்பு நாளைப்பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் இயேசு அடிக்கடி போதித்து வந்தார். அவருக்கு செவிமடுக்க மறுத்தவர்களைக் கண் டித்தார் " " நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் " (மத் 11 : 24). மீண்டுமாக அத்தீர்ப்பு பற்றிக் குறிப் பிடுகையில், " மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்க ளுக்குச் சொல்லுகிறேன் " என்றாறர். (மத். 12 :36). அப்போஸ்தலர் பேது ருவும் அந்நானளப் பற்றிக் கூறியிருக்கிறார். " கர்த்தர் தேவபக்தியுள்ளவர் களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கி னைக் குள்ளானவர்களாக நியாயத் தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்தி ருக்கிறார் " ( 2பேதுரு 2 : 9). பூமியிலே வாழ்ந்த, வாழுகின்ற சகல மக்க ளையும் தேவன் நியாயத் தீர்ப்பு நாளிலே தன் முன் கொண்டு வந்து நிறுத்தி, நீதி வழங்குவார்!

நியாயத்தீர்ப்பு நாள் தேவனுடைய நாள் என பலமுறை குறிப்பிடப் பட்டுள்ளது. ஏனெனில், அந்த நியாயசனத்திலே அவர் அமரும் போது அவருடைய வெற்றி முழுமையடைக்கிறது. அழிந்துபோகும் மனித உடலி ருந்து பரிசுத்தவான்கள் விடுபட்டுப் போவதாக பவுல் கூறுகிறார்: " .. அப்படிப் பட்டவருடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப் படும்படி .. " (1 கொரி 5 : 5) வேறு ஒரு இடத்தில் அவர் கூறுகிறார்: " இரவிலே

திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள் " (1தெச 5 : 2) இதே காரியத்தைப் பற்றி யோவான் கூறும் போது, " நியாயத் தீர்ப்பு நாளிலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது " என்றார் (1 யோவான் 4 : 17). அந்நாளைப்பற்றி இயேசு குறிப்பிடுகையில், " இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப் படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிக ளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக் கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் " என்றார். ( யோவான் 5 : 28, 29 ). தங்களுடைய நித்தியத் தீர்ப்பை அறிய, அந்த நாளிலே நல்லவர்களும் கெட்டவர்களும் ஒன்றாகக் கூடுவார்கள்.

**எதிர்பாராமல் வரும் அந்நாள்**

" இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாக அறிந்திருக்கிறீர்கள் " என அப்பவுல் கூறும்போது, பரிசுத்தவான்களுக்கு இந்த உண்மை தெரியும் என்கிறார். (1 தெச 5 : 2). இயேசு கிறிஸ்து தனது சீடர்களை எச்சரிப்பதைக் கவனியுங்கள்: " உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் " " நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் " (மத். 24 : 42,44 ). தன் வருகைப்பற்றி எந்த திருடனும் முன்னறிவிப்பு செல்வதில்லை. கர்த்தரும் தனது வருகையைப்பற்றிய அறிவிப்பு எதுவும் தருவதில்லை. தந்தால் அந்த நாளிலும் நாழிகையில் மட்டும் நீதியும் நியாயத்தையும் கடைபிடித்தால் போதும் என்று மெத்தனமாக இருந்து விடுவார்கள்.

தங்களுடைய விசேட வரங்களின் மகிமையால் கர்த்தரின் வரைகைக்கான தேதி எனக்குத் தெரியும் என்று கூறி மக்களிடையே பரபரப்பூட்டும் போலி மதத்தலைவர்கள் பலரை இன்று காண முடிகிறது. அவர்கள் இது வரை குறிப்பிட்ட பல தேதிகளில் மீண்டுமாக புதிய தேதிகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் கள்ளத்தீர்க்கதரிசிகள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். கர்த்தருடைய வசனங்களைக் கேளுங்கள். " அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியான், (மாற்கு 13 : 32). கள்ளப் போதகர்களின் வாயை அடைக்க இந்த வசனம் ஒன்று போதாதா தேவ குமாரனையும் தேவ தூதர்களையும்

விட அதிக ஞானமள்ளவர்களா இவர்கள்? இவர்கள் அறிந்தே பொய் பேசுகின்றார்; அல்லது ஞானக் குருடர்களாக இருக்கின்றனர்! இக்காரியத்தை பற்றி நமது இரட்சகரிடம் அவருடைய சீடர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் “ பிதாவானவர் தம்முடைய ஆதீனத்ததிலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல ” என பதிலளித்தார் (அப் 1 : 7). அவருடைய வருகை திடீரென, ஒரு நொடிப் பொழுதில் இருக்கும். “ மின்னல் வானத்தில் ஒரு திசையில் தோன்றி மறுதிசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார் ” (லூக் 17 :24). எதிர்பாராத வேளையில் திடீரென அவர் வருவார்!

**கிறிஸ்து வழியாக தேவன் நியாயம் தீர்ப்பார்!**

நியாயத் தீர்ப்பு பற்றி நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ன? “ மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் ” (அப். 17 : 30,31 ). நியாயாசனத்தில் அமர இயேசுவை தேவன் நியமித்தார். அப். பவுல் ‘‘ நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர் களையும் நியாயந் தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர் களையும் மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப் போக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிசரன்ன மாகுதலையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறேன் ” என்று கூறினார். (2 தீமோ. 4 : 1). “ உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத் தீர்ப்புக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார் ” என பரிசுத்தவான்களைப் பற்றி பேதுரு குறிப்பிடுகிறார். ( 1 பேதுரு 4 : 5 ). நியாயாசனத்திலே இயேசு அமரும் வேளையில், “ சகல ஜனங்களும் அவருக்கு முன்பகச் சேர்க்கப்படுவார்கள் ” (மத். 25 : 32).

பேதுரு ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார். “ நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? ” (1 பேதுரு 4 : 17 - 18 ). பவுல் இக் கேள்விக்கேற்ப பதிலளிக்கிறார். தேவனை அறியாவர்களுக்கும்

நம்முடைய கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு, வானத்திலிருந்து வெளிபடும்போது அப்படியாகும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். " (2 தெச. 1 : 7-10). ஆம்! பரிசுத்தவான்கள் உட்பட சகல தேசத்தாரும் தேவனை சந்திக்க வேண்டும்! " ... நாமெல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துக் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் " ( ரோமர் 14 : 10,12 ). இவ்வுலகில் ஒவ்வொருவரும் தான் வாழ்ந்த வாழ்க்கையின் படியே நியாயந்தீர்க்கப்படுவர். " ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் " (2 கொரி. 5 :10).

**இந்த நியாயத்தீர்ப்பு வெளிப்படுத்துவது என்ன?**

மனிதர்களின் சகல இரகசியச் செயல்களும் நியாயத்தீர்ப்பிலே அம்பலமாகும்; தேவன் " மறை பொருட்களை வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார் ( தானியேல் 2 : 47 ). நியாயத்தீர்ப்பின் காரியத்திலும் இது முற்றிலும் பொருந்தும், " பாதாளமும் அழிவும் கர்த்தரின் பார்வைக்குப் பிரத்தியட்சமாயிருக்க, மனுபுத்திரருடைய இருதயம் அதிக பிரத்தியட்சமாயிருக்குமல்லவா? ( நீதி. 15 ; 11 ) கண்டுபிடிக்க முடியாத இரகசியமோ, மறை பொருளோ இருக்காது! '' அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். " ( எபி. 4 : 13 ) புத்தகங்கள் திறக்கப்படும்; தேவனுடைய குறிப்புகள் யாவும் அதில் காணப்படும்.

நண்பரே, இதோ உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது இன்றே தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு ஊழியஞ் செய்து, அவருடைய வாசஸ்தலத்தில் இடம் பெறுவீர், அல்லது பரிசுத்தமான நற்செயல்கள் யாவற்றையும் உதறிவிட்டு உங்கள் இரட்சிப்பிலே அக்கரை கொள்வோரை அலட்சியப்படுத்திவிட்டு, கடைசி நாளை சந்திக்கப்போகும் நீங்கள் முடிவில்லாத வேதனைகளை அனுபவிக்கும்போது, வேறு யாரையும் நீங்கள் குறை சொல்ல முடியாது. நீங்களே அந்நிலைக்கு முற்றிலும் பொறுப்பாவீர்கள் ஆகையால் தேவனுடைய வசனத்தின் வழியாக வழங்கும் இரட்சிப்பை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? சிந்திப்பீர்! செயல்படுவீர்!

ளது
தர
பீடுகள்


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**





சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப்

Annual Subscripti

# திருமறை ஆசா

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 29 இதழ் – 6 ஜுன் 2016

